பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 24 வியாழக்கிழமை (09-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 285

# புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தொடரும் என படையினர் அச்சம்!

## பருத்தித்துறையிலும் தமிழீழ நீதிமன்றம்

### இன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 9

தமிழீழத்தின் மூன்றாவது நீதிமன்றம் இன்று காலை பருத்தித்துறையில் திறந்து வைக்கப்படவுள்ளது. ஏற்கனவே முதல் நீதிமன்றம் சுன்னாகத்திலும், இரண்டாவது நீதிமன்றம் சாவகச்சேரியிலும் திறக்கப்பட்டு அவை இயங்கி வருவது தெரிந்ததே. (இ-5)

## புக்காரா விமானங்கள் மீது புலிகள் பதில் தாக்குதல்!

### அலம்பிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 9

மணலாறுப் பகுதியில் உள்ள அலம்பில் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்திய புக்காரா விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தி அவற்றை விரட்டியடித்தனர்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகளின் "இதயபூமி ஒன்று" தாக்குதல் நடவடிக்கையின் வெற்றி நாள் நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இச் சம்பவம் நடைபெற்றது.

பிற்பகல் 3 மணியளவிலும் பின்னர் இரவு 9.30 மணியளவிலும் தாக்குதல் நடத்திய புக்காரா விமானங்கள் மீதே விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர்.

## கிளாலி கடற் பிரதேசத்தில் தாக்குதல் தொடர்கிறது

### எனினும் படகுசேவை பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், செப். 9

நேற்று முன்தினம் இரவு கிளாலி—ஆனையிறவு கடல் பகுதியில் ஹெலி ஒன்று வட்டமிட்டு கலிபர் தாக்குதலை நடத்தியது. புக்காரா விமானம் ஒன்றும் அப்பகுதியில் பறந்தது. இரவு 9-30 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. நள்ளிரவுக்கு சற்றுப் பின்பும் ஹெலி ஒன்று வந்து வட்டமிட்டுச் சென்றது. எனினும் படகு சேவை தடை எதுவும் இன்றி நடைபெற்றது.

அதேசமயம் தேங்காய், சைக்கிள் உதிரிப்பாகங்கள் உட்பட பல பொருள்கள் ஆனையிறவில் இருந்து கிளாலிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117-15)

## 3 ஆண்டுகளில் 3,000 தமிழர் மட்டு. மாவட்டத்தில் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமான காலம் முதல் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் சுமார் 3 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பத்திரிகை ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். 758 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அங்கு நாசமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் விளைவுகளாலும், மக்கள் இடம்பெயர நேர்ந்தாலும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் இத்தகவலை அப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. (இ-5)

## பொதுக் கல்வித் தேர்வு 28 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 9

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஆண்டு தோறும் நடத்தப்படும் தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு இம்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை நடைபெற உள்ளது.

28ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துடன் பரீட்சை ஆரம்பமாகிறது. அக்டோபர் 4ஆம் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதி உஷார் நிலையில் இருக்க துருப்புகளுக்கு உத்தரவு

கொழும்பு, செப்டெம்பர் 9

மண்கிண்டிமலைத் தகர்ப்பு, கடற்படைப் படகுகள் தகர்ப்புப் போன்று மற்றும் பல அதிரடித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்தக்கூடும் என பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம் நிலவுவதாகவும்—

இரகசியத் தகவல்கள் மூலம் கிடைத்த தரவுகளைத் தொடர்ந்து முப்படையினரும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும்— கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளின் அதிரடிக் குழுக்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியாக பொலிசார் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் விடுதலைப் புலிகள் எங்கெங்கே தமது அதிரடித் தாக்குதல்களை நடத்த உத்தேசித்திருக்கிறார்கள் என்பது குறித்து இராணுவ இரகசியத் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கிறதாம். அவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினர் தமது முகாம்களைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருப்பதால், புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி, முன்னேற முடியாத இக்கட்டான நிலை தோன்றியிருப்பதாக இராணுவப் பகுப்பாய்வாளர்கள் கருத்துத் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் சூடு!

யாழ்ப்பாணம், செப். 9

அராலிக் கடற்பிரதேசத்தில் இருந்து நேற்று அதிகாலை 2 மணிக்கு அராலித்துறை கரையோரப் பகுதியை நோக்கி கடற்படையினர் பிரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதே சமயம் —

கொழும்புத்துறை கடற்பிராந்தியத்தில் நேற்று காலை 9 மணியளவில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி கன்முனை பகுதி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். (உ-15-17)

## மண்கிண்டிமலைத் தகர்ப்பு:

## தவறிழைத்த பிரிகேடியர் மீது வேறு பல குற்றச்சாட்டுகள்

மண்கிண்டிமலை (ஜானகபுர) இராணுவ முகாமை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்தது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவிருக்கும் பிரிகேடியர் ஹமி லியனகே ஏற்கனவே தெற்கில் இடம்பெற்ற அடிப்படை உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றிற்கு பின்னணியில் இருந்தவர் எனக்குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

தெற்கில் ஜே. வி. பி. வன்செயல்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தபோது எம்பிலிப்பிட்டியாவில் உள்ள ஒரு பாடசாலையைச் சேர்ந்த 32 மாணவர்கள் இராணுவத்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ப.நோ.கூ. சங்கங்களில் பொருள்கள் விலை உயர்வு

போக்குவரத்து, நிர்வாக செலவுகளின் அதிகரிப்புக் காரணமாக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ப. நோ. கூ. சங்கங்களின் விற்பனை விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி வெள்ளைப்பச்சை அரிசி கிலோ ரூ17.50 ஆகவும்—

கோறா அரிசி கிலோ ரூ 18.00 ஆகவும்—

நாட்டரிசி கிலோ ரூ18.00 ஆகவும்—

மா கிலோ ரூ.14.50 ஆகவும்—

சீனி கிலோ ரூ.30.50 ஆகவும்—

மைசூர் பருப்பு கிலோ ரூ 55 00 ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (இ-162)

## நாட்டிலிருப்பது இனப்பிரச்சினையா? அல்லது பயங்கரவாதச் சிக்கலா?

### ஜே. ஆர்., காமினி, சந்திரிகாவிடம் குமார் நேரில் கேள்வி

கொழும்பு, செப். 9

கொழும்பில் கடந்த வாரம் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா, முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா ஆகியோர் அதில் கலந்து கொண்டு பேசினார்கள்.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

இந்த நாட்டில் தமிழர் பிரச்சினை ஒன்று உண்டு என்பதை ஏற்கிறீர்களா? அல்லது நாட்டில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான் என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறியதை நம்புகிறீர்களா?

இது தான் அந்தக் கேள்வி.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தனக்கே உரிய பாணியில் கேள்விக்குப் பதிலளிக்காமல் மழுப்பிச் சமாளித்தார்.

காமினி திஸநாயக்காவும் சந்திரிக்கா குமாரணதுங்காவும் நாட்டில் இருப்பது தமிழர் பிரச்சினை என்ற நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.

திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா இன்னும் ஒருபடி மேலே போய் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் அணுகுமுறையில் அரசியல்வாதிகள் நேர்மையாக நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16 — 06 — 1939

உதிர்வு: 21 — 08 — 1992

அமரர்

## காசிப்பிள்ளை சோமசுந்தரம்

(இராசு) — (சோமு)

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன கனரக வாகன இயக்குநர் — கற்கழிப்பகுதி)

திதி:- 09—09—1993

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் அன்பு வதனம் எம் உள்ளங்களை விட்டு அகலாது. ஆலமரமாய் இருந்தீர்கள். அதில் வாழும் பறவைகளாய் நாமிருந்தோம். கொடுங்காலனவன் கவர்ந்தான் கதறி நாம் துடிக்கின்றோம். காலங்கள் பல கடந்தாலும் எங்கள் உள்ளங்களில் இருந்து உங்கள் புகழுடம்பு மறையாது.


குறிப்பு:- இன்று 09 - 09 - 1993 எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டு திவசத்தில் அனைவரையும் பங்கு பற்றி சிறப்பிக்கும் வண்ணம் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்!

மனைவி, பிள்ளைகள்.

கோணப்புலம் வீதி,
மல்லாகம். [6645]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 10 — 1939

மறைவு: 10 — 08 — 1993

## அமரர் சூ. அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் சீனோர் உத்தியோகஸ்தர் தற்போது கவின் வைத்தியசாலை ஊழியர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
அமைதியே உருவான அன்புத் தந்தையே
எங்களை சீராட்டி பாராட்டி உருவாக்கிய
எங்கள் புண்ணிய சீலரே

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் ஆனாலும் தெய்வம் இல்லாத ஆலயம் போல் இன்று ஒளி இழந்த எங்கள் ஆலயத்தில் நீங்கள் என்றென்றும் ஒளி விளக்காக இருக்க வேண்டும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: அருள்சீலி,
பிள்ளைகள்: அன்ரன் (சுவிஸ்)
விஜி, (சுவிஸ்) செல்வி,
அஞ்சலா, டைனா,
றயன், கஸ்தூரியா.
சகோதரர்: மரியம்மா,
நல்லமணி,
அரு. சகோ.மேரி விஜயா A. C.
மச்சான்மார், மச்சாள்மார்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
உங்கள் நினைவாய் வாடும் ஆசை
மருமக்கள்

லோட்டன் வீதி,
மானிப்பாய். [6470]

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆசிரியர் திரு. க. ஆனந்தராசாவின் இசைச் சொற்பொழிவு நடைபெறும். (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:

★ 4.00 மணி:- கோப்பாய் கோஸ்ட் ஸ்ரார் "ஏ" அணி எதிர் ஞானமுருகன் "பீ" அணி.

★ 5 00 மணி:- றோயல் "ஏ" அணி எதிர் அண்ணா "ஏ" அணி. (உ-20)

o o o

"சென். அன்ரனீஸ்" கேடயத்துக்காக பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் இன்று மாலை 4 15 மணிக்கு திருமலை நட்சத்திர அணியை எதிர்த்து யங் றோயல் அணி மோதும்.

o o o

யாழ்ப்பாணம் அரியாலை சித்தம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் "செற்-அப்" முறையிலான கரப்பந்துச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்றில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பாரதி வி.க. அணியை எதிர்த்து ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க. அணி மோதுகிறது.

## இறந்தவர் அடையாளம் காணப்பட்டார்

தென்மராட்சி, செப். 9

கடந்த திங்கட்கிழமை கிளாலி — ஆலங்கேணிப் பகுதியில் இடம்பெற்ற புக்காரா தாக்குதலில் மரணமடைந்தவர் பாலச்சந்திரன் சுமனதாஸன் (வயது 17) என்று அடையாளம் காணப்பட்டது.

இவர் திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து நாகர் கோவிலில் தங்கி இருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 9

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகங்களின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட சகல பாடசாலை அதிபர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வேலணை பிரதேச செயலகத்தில் சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (இ)


BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.
புதிய பிரிவு:
SPOKEN ENGLISH
with
GRAMMAR
by
M. A. ஹரி
B. A. Dip. in - Eng.
ஆரம்பம்:
10 - 09 - 1993
Fri. [illegible]
(சி-6076)


# தாக்குதலைக் கண்டித்து உண்ணாவிரதம்

சுழிபுரம்—பறாளை முருகன் தேவஸ்தான தாக்குதலைக் கண்டித்தும், இந்துக்கோவில்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரியும், உண்ணாவிரதம் நடத்த ஏற்பாடாகி உள்ளது.

இடம்:- சுழிபுரம்—பறாளை முருகன் தேவஸ்தானம்
காலம்:- 10—09—1993 வெள்ளிக்கிழமை
நேரம்:- காலை 8.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை

ஆரம்பித்து வைப்பவர்:-

பிரம்மஸ்ரீ சு ஷண்முகரத்னசர்மா அவர்கள்
(தேவஸ்தான செயலர், முன்னாள் அதிபர்)

அடியார்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

அமைப்பாளர்
சோழியூரான், பிறைசூடிக்குரு

(27229)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 09 — 06 — 1909

மறைவு: 10 — 08 — 1993

திருமதி

## சுப்பிரமணியம் இராசம்மா

(இராசாவின் தோட்டம், நல்லூர்)

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து எங்களுக்கு அன்பும் அறிவும் ஊட்டி ஆசி தந்து வாழவைத்த தெய்வமே நீங்கள் மறைந்து இன்றுடன் நாள் முப்பத்தி ஒன்று (31) ஆகியும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில் என்றும் நிறைந்துள்ளது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

எமது தாயாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிள்ளைகளும், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும்.

68/2, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (27228)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 – 02 – 1942

உதிர்வு: 21 – 08 – 1992

திருமதி

## கண்ணம்மா துரைராஜா

(7 ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

இரவும் பகலும் உன் நினைவுகள்
நாறென மலரைத்தூவி கண்ணீர் வடிக்கின்றோம்
உயிரிலும் உயிராய் தாங்கிய தாயே
உனைப் பிரிந்து ஆண்டொன்றானதோ

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

84, செல்லர் வீதி,
நல்லூர். [27231]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய வகுப்பேற்றத்தை நிறுத்துமாறு அறிவிப்பு

## கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, செப் 9

பாடசாலைகளில் ஆண்டு இறுதிப் பரீட்சைகளில் சித்தி அடையத் தவறும் மாணவர்களை அடுத்த மேல் வகுப்புக்கு வகுப்பேற்றம் செய்யும் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று லங்காதீப சிங்கள பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கீழ் வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கேற்றுவதற்கான புள்ளி எல்லையைத் தீர்மானித்து, குறித்த புள்ளி எல்லைக்குக் கீழான புள்ளிகளைப் பெறும் எந்த மாணவரும் மேல் வகுப்புக்கு அனுப்பப்படக்கூடாது என்றும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மாணவர்களின் கல்வித் தரம் முன்னேற்றமடையாது, கிடைத்த கல்வியில் முன்னேற்றம் காட்டாத மாணவர்களை வகுப்பேற்றுதல், அவர்களுக்கே பாதிப்பு என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டிறுதிப் பரீட்சைகளில் தோல்வியடையும் மாணவர்களை மேல் வகுப்புக்கு அனுமதிக்கும் திட்டம் தற்பொழுது அமுலிலுள்ளது தெரிந்ததே. (ஒ-6)

## ஜே. ஆரின் இல்லம் அரசாங்கத்துக்கு நன்கொடை

கொழும்பு, செப். 9

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொழும்பு வார்ட் பிளேசில் உள்ள தமது 'பிரேமார்' இல்லத்தை அரசாங்கத்துக்கு நன்கொடையாக வழங்கி விட்டார்.

திரு. ஜெயவர்த்தனா தனக்கும் தமது மனைவிக்கும் சீவிய உரித்து வைத்தே அதனை நன்கொடை செய்துள்ளார். இவ்வீட்டில்தான் திரு. ஜெயவர்த்தனா குடும்பம் கடந்த 50 ஆண்டுகளாக வசித்து வருகின்றது. (ஒ-எ)

முகாம்களில் இடநெருக்கடி:

# நாடு திரும்பும் அகதிகளை தங்கவைக்க முடியாத நிலை

திருகோணமலை, செப். 9

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் வடபகுதி அகதிகளை திருகோணமலையில் இருந்து வவுனியாவுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் அங்குள்ள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. வடபகுதி அகதிகளை தற்காலிகமாக தங்க வைக்கும் வவுனியா, ஆசிகுளம், வேப்பங்குளம் அகதி முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பும் வடபகுதி அகதிகளை எங்கு தங்க வைப்பது என்று தெரியாமல் அதிகாரிகள் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

கடந்த 29ஆம் திகதி ஆயிரத்து 100 அகதிகள் 'ரிக்கோபார்' கப்பல் மூலம் திருமலை வந்து சேர்ந்தனர் இவர்களை திருமலையில் தற்காலிகமாக தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருமலை மாவட்ட அகதி உடனடியாக அலஸ் தோட்டத்தில் உள்ள— அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அமைத்த— வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நெடுந்தீவைச் சேர்ந்த அகதிகள் ஓசியானிக் ஹோட்டல் முகாமுக்கு அனுப்பப்பட்டனர். (ஓ)

சு. கவின் கொள்கை அறிக்கை:

# வீடு வீடாகச் சென்று விளக்குவதற்கு முடிவு

கொழும்பு, செப். 9

சுதந்திரக்கட்சி தனது 24 பக்க கொள்கை அறிக்கையை வீடு, வீடாகச் சென்று விளக்கும் இயக்கத்தை இம் மாதம் 18ஆம் திகதி மாத்தளையில் ஆரம்பிக்க இருக்கிறது.

கட்சியின் கொள்கை விளக்க அறிக்கையைத் தயாரித்த குழுவின் தலைவரான அனுருத்த ரத்வத்தை இத்தகவலை வெளியிட்டார்.

இக்கொள்கை அறிக்கையில், சுதந்திரக் கட்சியின் வெளியுறவுக் கொள்கை, ஜனசக்தி திட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ள திட்டம், கல்வி, சுகாதாரம், சமூக நலன், போக்குவரத்து மற்றும் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் பற்றிய நிலைப்பாடுகளும் விவரிக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

அனுரா விவகாரம்:

# "அம்மா செய்வது சரி" சு.க. கூட்டத்தில் கோஷம்

கொழும்பு, செப். 9

கண்டி பேராம்பரையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் "அம்மா செய்வது சரி" என்று அங்கு கூடியிருந்த ஒரு பிரிவினர் கோஷமிட்டனர்.

திருமதி பண்டாரநாயக்கா அங்கு உரையாற்றும் போது—

அனுரா பண்டாரநாயக்கா மற்றும் களுத்துறை மாவட்ட எம். பி. திலக்கருணாரத்னா ஆகியோர் மீது சுதந்திரக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் — என்றார்.

அவர் இதனைத் தெரிவித்த சமயத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் அனுராவைத் தண்டிக்க வேண்டாம் என்று கோஷம் எழுப்ப, இன்னொரு பிரிவினர் 'அம்மா செய்வது சரி' என்று உரத்த குரலில் கத்தினார்கள்.

"கட்சியை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட இன்று என்னுடன் மேடையில் உள்ளனர்" என்றும் இன்னொரு கட்டத்தில் சிறிமா கூறினார். (ஒ-எ)

அண்மைய புலிகளின் தாக்குதல்கள்:

# இராணுவ நடவடிக்கையில் பெரும் பின்னடைவு நிலை

## அரசுப் பத்திரிகை கருத்து

கொழும்பு, செப் 9

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சி, கிளாலி மற்றும் பருத்தித்துறைக் கடலில் கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஏற்பட்ட பெரும் பின்னடைவுகளாகும்.

இதில் சந்தேகமே இல்லை என்று அரசின் கட்டுப்பாட்டில் உள்ள "டெய்லி நியூஸ்" ஆங்கில நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் தெரிவித்துள்ளது. [ஒ-எ]

# குடிதண்ணீர் தட்டுப்பாடு

நாவற்குழி வெளிநா அகதிகள் முகாமில் குடிதண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது.

தண்ணீரை எடுத்துவர அங்குள்ளவர்கள் பல மைல்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-17)


யாழ். இந்து மகளிர் கல்லூரி

பொன் விழா ஆண்டின்

**கலை விழா**

முதலாம் நாள்

கல்லூரி மாணவிகள் வழங்கும் நிகழ்வுகள்

காலம்: 09 — 09 — 1993 வியாழக்கிழமை மாலை 4-30 மணி

இடம்: கல்லூரி திறந்த வெளியரங்கு

தலைவர்: திருமதி தி. நாகராசா அதிபர்

பிரதம விருந்தினர்: திரு. எஸ் பத்மநாதன் திட்டப் பணிப்பாளர், செயலகம் யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ. பஞ்சலிங்கம் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

திரு. அருண்மாஸ்ரர் தமிழீழக் கல்வி மேம்பாட்டுக் கழகம். நல்லூர்.

நிகழ்ச்சி நிரல்

5-00 — 5-30 மணி: குழுப்பாடல்

5-35 — 6-05 மணி: "The Whirl Wind" (English Drama)

6-10 — 6-40 மணி: ஒரு பூனையின் விலை என்ன? (சிறுவர் நாடகம்)

6-45 — 7-15 மணி: பல்லியம் (கீழைத்தேசம்)

7-20 — 7-50 மணி: நல்லைக் குறவஞ்சி (நாட்டிய நாடகம்)
ஆக்கம்: பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர்

7-55 — 8-15 மணி: பல்லியம் (மேலைத்தேசம்)
ஆக்கம்: எம். கண்ணன்

நன்றியுரை:

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொன்விழாச் சபையினர்.

விளம்பர அன்பளிப்பு: கல்யாணி கிறீம் ஹவுஸ் 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(இ-6067)


# பட்டப்படிப்பின் தரத்தை நுண்கலைத்துறையும் பெறும்

## மிருதங்க அரங்கேற்றத்தில் உரை

யாழ்ப்பாணம், செப். 9

இதர துறைகளிலும் பார்க்க நுண்கலைத் துறை அதி முக்கிய நிலையை எட்டக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகி வருகின்றன. பட்டப் படிப்புக்கான நிலையை விரைவில் இத்துறையும் பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான செல்வன் தினேஷின் (அரியநாயகம் ஸ்ரீகாந்தா) மிருதங்க அரங்கேற்றத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் அண்மையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது;

எமது மக்களையும், பிரதேசத்தையும் உலகம் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் எமது கலைத்துறையை நாம் வளர்க்க வேண்டும். இன்று தென்னிந்தியப் படைப்புக்களிலும் பார்க்க சிறந்த படைப்புக்கள் இங்கு வெளியாகின்றன. போராளியாக இருந்தாலும் தனது கலை ஈடுபாட்டை வளர்த்தெடுப்பதன் மூலம் எமது இ[illegible] [illegible] ஏற்படுத்த முனைந்துள்ள இந்த இளைஞர் பாராட்டுக்குரியவர் என்றார்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தனது தலைமை உரையில் கூறியதாவது;

கடல் தடைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில், பெரிய யுத்த மேகம் கவிந்து வரும் பூமியில் வாழும்போதும் இது போன்ற கலைப் போராட்டங்களினூடாகவும் உலகுக்கு வழி காட்டும் நாடாக எமது மண் விளங்க வேண்டும். சாதாரண மக்களிலும் பார்க்கப் போராளிகள் நிறையச் சொல்ல வேண்டியுள்ளது. எனவே அவர்கள் பல துறைகளிலும் வர வேண்டிய தேவை உண்டு.

போராளி ஆயுதத்துடன் மட்டும் பழகுபவனல்ல இந்த மண்ணின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் மிக்கவனாகவும் உள்ளான். எந்தத் துறையிலும் எமது போராளி நிபுணத்துவம் பெறவேண்டும் என்பதில் எமது தலைவர் மிகுந்த அக்கறை கொண்டு அதற்காகச் செயல்பட்டு வருபவர்.

தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழீழம் பெற்றோம் என்பதல்ல. அவரின் காலத்திலேயே அவரின் கனவுகளை வளப்படுத்தியுள்ளோம் என்றும் நாம் பெருமைப்பட வேண்டும்.

எமது போராளிகள் வீரத்தில் மட்டுமல்ல இம்மண்ணின் கலைகளிலும் சிறந்தவர்கள் என்பதை உணர்த்தும் ஒரு நிகழ்வு இது — என்றார்.

வண. பிதா ஜோசப் மைக்கல் அடிகளார் பேசும்போது கூறியதாவது:-

பல்வேறு சாதனைகளை நிகழ்த்திவரும் விடுதலைப் புலிகளின் இன்னும் ஒரு சாதனையாக இந்த அரங்கேற்றம் இடம்பெறுகின்றது. சமுதாய வளர்ச்சி மேம்பாட்டுக்கான வழிநடத்தல்களில் இருக்க வேண்டிய தலைமைத்துவத்தின் தனித்துவம் இதனால் மெருகடைகின்றது.

போராளிகளுக்கும் தோலிசைக் கருவிகளுக்கும் உள்ள தொடர்பு நெருக்கமானது. இசை எமது எண்ணங்களையும், உணர்வுகளையும் தூண்டுவதுபோல் வீரம் ஊட்டும் இசையானது மனிதனைப் போர்முனையில் முன்னணிக்குக் கொண்டு செல்கின்றது எனவே வீரத்துடன் இசையிலும் போராளி ஈடுபடுவது வியப்பல்ல— என்றார்.

முன்னதாக யாழ் மாவட்டச் சிறப்புத் தளபதி திரு செல்வராசா, மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா ஆகியோர் மங்கள விளக்கேற்றி, நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவித்துப் பரிசில்களை வழங்கினர்

கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் சேரலாதன், இயலிசை வாரிதி திரு. கி. வீரமணி ஐயர், திரு. கி. மகேந்திரன் ஆகியோரும் பேசினார்கள் திரு பொன் சுந்தரலிங்கத்தின் இசை அரங்கும் இடம்பெற்றது. (த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதல் மாணவரை அனுமதிக்கும் விவகாரம்:

# அரசு வழங்கியநிதி முறையாக பயன்படுத்தப்படவில்லை

## உபவேந்தர்கள் மீது கண்டனம்

கொழும்பு, செப். 9 பல்கலைக்கழகங்களில் கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதற்கு ஏதுவாக அரசு வழங்கிய நிதியை முறையாகப் பயன்படுத்தி தேவையான வசதிகளைச் செய்ய உபவேந்தர்கள் தவறிவிட்டனர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

தேவையான நிதியை உபவேந்தர்கள் முறையாக ஒதுக்கவில்லை. இருக்கும் வளங்கள் கூட பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் ஆணைக்குழு குறை கூறியுள்ளது.

மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி உபவேந்தர்கள் விடுத்த கோரிக்கை பற்றி கருத்து வெளியிடுகையில் —

''மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது இந்த ஆண்டும் 800 மாணவர் வரை மருத்துவபீடங்களில் அனுமதிக்கப்படுவார்கள்'' — என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் அர்ஜுனா அலுவிஹார தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டில் இரண்டு ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்பட்டதால் கடந்த ஆண்டில் கூடுதலான மாணவர்களை மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்க மானிய ஆணைக்குழு தீர்மானித்தது என்றும் அவர் கூறினார்.

டாக்டர்களின் பற்றாக்குறையை நீக்க ஆண்டுதோறும் ஆயிரத்து 100 டாக்டர்கள் தேவைப்படுகின்றனர். இதனை உபவேந்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

(இ-எ)


## LONDON EXAMS
**May - June 1994**

C. I. M. A. - Stage I
A. A. T. - Inter
I. A. B. - (Found & Inter)

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
(Result Oriented Institute in North)
14, St. Peters's Lane, Jaffna.

(C-6071)



## தேவை

### பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் எமது தலைமைச் செயலகத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

| | |
|---|---|
| கல்வித் தகைமை: | ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு அல்லது |
| அனுபவம்: | ஆகக் குறைந்தது 2 வருடங்கள் |
| வயது: | 35 முதல் 55 வரை |
| சம்பளம்: | பேசித் தீர்மானிக்கப்படும். |

சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சான்றிதழ்களுடனும், சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் செப்டம்பர் மாதம் 14ஆம் திகதி (14-09-93) காலை 10 மணியிலிருந்து 1 மணி வரையில் நேரில் வரவும்.

— மாவட்டச் செயலாளர்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்,
மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(27227)



உ

## நன்றி மறப்பது நன்றன்று



என் அன்பு நெஞ்சங்களே!
எம் ஐயன் அருளால், உள்ளூராட்சி சேவையில் முப்பது (30) ஆண்டுகள் சேவையாற்றி 01-10-93 இல் ஓய்வு பெற உள்ளேன் என்ற நற்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

எனக்கு எவ்வாற்றாலாயினும் உதவிய, உதவும் எல்லோர்க்கும் என்னுளங் கனிந்த நன்றி கூர் வணக்கங்கள்.

தங்கள் அன்பன்
ஆ. கா. தில்லைநடராஜா
(வேலணை)

கல்வயல்,
சாவகச்சேரி,
01 - 09 - 93

(27212)


## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 9

''யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விழுதுகள்'' என்னும் வரலாற்று நூல் வெளியிடும் வைபவம் இன்று வியாழன் நண்பகல் 12 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிர் ஈந்த யாழ். இந்துவின் மாவீரர்கள் நினைவாக கல்லூரி பழைய மாணவர்களது ஆக்கமே இதுவாகும். (ஓ)

## 'சாளரம்' வெளிவந்தது

யாழ்ப்பாணம், செப். 9

சாளரம் செப்டெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது. வழமையான பயன் தரும் விடயங்களுடன் கணிதமேதை இராமானுசன் பற்றிய ''முடிவிலாப்பேருலகின் முடிவை அறிந்தவர்'' என்ற தலைப்பிலான பிரசுரம் ஒன்றும் சாளரத்துடன் இலவச இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது. (ஓ)


### சமூகக்கல்வி
(O/L 1993)

மீட்டல்
வினா-விடை

அறிவொளி
கல்விக் கழகம்
நல்லூர் 10 — 11

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் 7 — 8

அறி ஒலி கல்வி
நிறுவனம்
ஆனைக்கோட்டை
11 — 12

ஆரம்பம்:
**11-09-1993**

(சி-6072)


# யாழ். பல்கலைக்கழகத்தின் 13ஆவது பட்டமளிப்பு விழா

யாழ். பல்கலைக்கழகத்தின் 13ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருப்பதாக பதில் துணைவேந்தரும், கலைப்பீடாதிபதியுமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் — துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் — மூன்று அமர்வுகளில் பட்டமளிப்பு விழா நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த 641 பேர் தமக்குரிய பட்டங்களை பெற்றுக்கொள்வர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் ஆவர்.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் முதுமெய்யியல் மாணி, முதுகலைமாணி, பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திரசிகிச்சை மாணி, சித்தமருத்துவ சத்திர சிகிச்சைமாணி, வர்த்தகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும். இரண்டாவது அமர்வில் கலாநிதி (விஞ்ஞானம்), முது விஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி, தொழில் நிர்வாக மாணி, ஆகிய பட்டங்களும் —

மூன்றாவது அமர்வில் கலாநிதி (கலை) கலைமாணி, இசைக்கலைமணி, நடனக்கலைமணி, ஆகிய பட்டங்களும் வழங்கப்படும்.

இம்முறை பட்டமளிப்பு விழாவில் இருவர் கலாநிதிப் பட்டங்களைப் பெறவுள்ளனர். திருமதி நிரஞ்சனி சண்முகநாதன் (விஞ்ஞானம்), எழுத்தாளர் க. குணராஜா (கலை) ஆகியோருக்கே கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது.

பட்டமளிப்பின் ஒவ்வொரு அமர்வின் முடிவிலும், பரீட்சைகளில் திறமையாகச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவையொட்டி இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் மறுநாள் 12ஆம் திகதி இடம்பெறும்.

தொடர்ந்து 13ஆம், 14ஆம் திகதிகளில் பிற்பகல் 3 மணிக்கு நினைவுப் பேருரைகள் நடைபெறும்.

13ஆம் திகதி பிற்பகல் பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனும், 14ஆம் திகதி பிற்பகல் சேர், பொன் இராமநாதன் நினைவுப் பேருரையை, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைத் தலைவர் திரு. எம். நடராஜசுந்தரமும் வழங்குவர். (இ-5)

### அரசமைப்புத் திருத்தத்துக்கான

# தெரிவுக் குழுவை சு.க பகிஷ்கரிக்காதாம்

கொழும்பு, செப். 9

அரசமைப்பின் சீர்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை பகிஷ்கரிக்கப் போவதில்லை என்றும் —

பாரிய மாற்றங்களை அரசமைப்பில் செய்வதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது என்றும் சுதந்திரக் கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக் குழுவின் அமர்வுகளை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது தெரிந்ததே.

இக்கோரிக்கையை ஏற்க சுதந்திரக் கட்சி மறுப்புத் தெரிவித்துள்ளது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துடன் இணைந்த தேர்தல் தொகுதி முறையை சுதந்திரக் கட்சி தனது யோசனையாக தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

# ஒரே மேடையில் அருகருகில் பிரதமர் ரணிலும் காமினியும்

## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

கொழும்பு, செப். 9

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவை தம்முடன் மேடையில் அமர்ந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அருகில் வந்தமரும்படி முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அழைத்த சம்பவம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜெயவர்த்தனா நிலையத்தைத் திறந்து வைத்த நிகழ்ச்சியின் போது தான் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்று காமினி மேடைக்குச் சென்று ரணிலின் அருகில் அமர்ந்து கொண்டு அளவளாவினார். இந்தப் படத்தைப் பிரசுரித்த ''சண்டே ரைம்ஸ்'' இச்சந்திப்பு அரசியல் அவதானிகளை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது என்று தெரிவித்தது. (ஓ-எ)

# யாழ். வின்ஸர் தியேட்டர் உணவுக் களஞ்சியமாகும்!

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்டத்திற்கு வரும் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பில் வைத்திருப்பதற்காக யாழ், வின்ஸர் தியேட்டர் பயன்படுத்தப்படவுள்ளது.

வின்ஸர் தியேட்டர் கோட்டையில் இராணுவம் இருந்த காலப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி கூரைத் தகடுகள் நொருங்கிய நிலையிலும் கட்டடத்தின் சில பகுதிகள் உடைந்த நிலையிலும் காணப்படுகின்றது.

இதைத் திருத்தியமைப்பதற்கான கூரைத் தகடுகளை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு யாழ். அரச அதிபருக்கு அனுமதி அளித்துள்ளது.

ராஜா தியேட்டர், மனோகரா தியேட்டர் என்பவையும் யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியின் உணவுக் களஞ்சியமாக பயன்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-162)

## லலித்துக்கு நாளை சபையில் அஞ்சலி

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு அஞ்சலி செலுத்தும்பிரேரணை நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# பிரதான வீதிகளைத் திருத்த ரூ. 18½ லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்டத்தின் பிரதான வீதிகளைத் திருத்துவதற்காக 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளது.

இந்த நிதியில் இருந்து முதலில் யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதி புனரமைக்கப்படவிருக்கிறது.

அதைத் தொடர்ந்து யாழ்-காங்கேசன்துறை வீதி, யாழ்-பலாலி வீதி ஆகியன புனரமைக்கப்படவிருக்கின்றன.

இந்த திருத்த வேலைகளுக்காக "ருகுணு" கப்பலில் 100 பரல் தார் எடுத்துவரப் பட்டுள்ளதாகவும் — அடுத்த வாரமளவில் மேலும் 100 பரல் தார் "ருகுணு" கப்பலில் எடுத்து வரப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# மின்சாரக் கட்டணம் 100 வீதம் அதிகரிக்கும்!

மின்சாரக்கட்டணம் 1995 ஆம் ஆண்டளவில் நூறு வீதம் அதிகரிக்கப்படும்.

திறைசேரி, இலங்கை மின்சாரசபை மற்றும் உலக வங்கி ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்ட உடன்பாடு ஒன்று இந்த அதிகரிப்புக்கு வழி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை திறைசேரி செய்துகொண்டபோது இடம்பெற்ற குளறுபடி காரணமாக இக்கட்டண அதிகரிப்பு இடம்பெறும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை உயர் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். [ஒ எ]

# 5ஆம் வகுப்பு படித்தவருக்கு மாதம் ரூ. 5,173 சம்பளம்!

கொழும்பு, செப். 9

இராணுவத்தில் புதிதாகச் சேரும் சாதாரண சிப்பாய் ஒருவர் படி மற்றும் மாதாந்த சம்பளமாக 5 ஆயிரத்து நூற்றி எழுபத்திமூன்று ரூபாவைப் பெறுவார்.

உணவு, சீருடை, போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் எல்லாம் இலவசம். அத்தோடு அரசாங்கத்தால் வழங்கப்படும் சகல சலுகைகளும் அவர்களுக்கு கிடைக்கும்.

சேவைக்குப் பின்னர் திருமணம் செய்யும் பட்சத்தில் வீட்டு வாடகையாக 850 ரூபா முதல் 2 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும்.

புதிதாக இராணுவத்திற்கு சேர்பவர்களின் கல்வித் தகைமையும் குறைக்கப்பட்டுள்ளது. 5 ஆம் வகுப்பு படித்திருந்தால் போதும்.

இராணுவத்தில் சேர விரும்புபவர்களுக்கு இதுவரை இருந்து வந்த நடைமுறையில் வேறு மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. 17 வயதுடைய, 5' உயரமுள்ளவர்களும் இராணுவத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கு சிங்கள இளைஞர்கள் சேர பின்னடிப்பதால்தான் அரசாங்கம் இந்தளவுக்கு கீழிறங்கி வந்துள்ளது என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஓ)

## கால எல்லை நீடிப்பு

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் சேர்ந்தவர்கள் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான கால எல்லை 1994 டிசம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# செய்திக் கொத்து

## சாரணர் விருது

யாழ். மத்திய கல்லூரி சாரணக் குழுவின் முன்னாள் தலைவரும் தற்பொழுது நோர்வேயில்பொறியியலாளர் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவருமான திரு கலாஹறஜி சமீபத்தில் நோர்வேயில் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போறியில் சாரணத் தலைவர்களுக்குரிய அதி உயர் விருதுவான தருசின்னத்தைப் பெற்றுக் கொண்டார். (க)

## கல்வி பயில வசதி

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையத்தில் இரவு வேளைகளில் மாலை 6-30 தொடக்கம் 8-30 மணி வரை இரண்டு பெற்றோமக்ஸ் உதவியுடன் கல்வி பயில வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (க)

## ஓர் அதிபர் ஓர் ஆசிரியர்

நூற்றிப் பத்து மாணவர்களையும், ஆறு வகுப்புகளையும் கொண்ட அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையில் நீண்ட காலமாக அதிபரும் ஒரு பயிலுநர் ஆசிரியருமே உளர் என அறிவிக்கப்படுகிறது. (க-12)

## உருவப்படம் திரை நீக்கம்

நவாலி விடேசன் பாடசாலையில் சோமசுந்தரப் புலவரின் உருவப்படம் அண்மையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (க-162)

## சான்றுப் பத்திரம் வழங்கல்

மானிப்பாய் வை. எம். சி. ஏயால் நடாத்தப்பட்ட இரண்டாவது இளைஞர் தலைமைத்துவப் பாசறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட 80 யுவதிகளுக்கு அண்மையில் சான்றுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (க-90)

## தலைமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு ஆரம்பிக்கப்பட உள்ள தலைமைத்துவ பயிற்சி நெறி அக்டோபர் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா தெரிவித்துள்ளார். (க-152)

## புலமைப் பரிசில்

1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தர விசேட பரீட்சை, 1992 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சை ஆகியவற்றிற்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற தகுதியுடைய மாணவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அமரர் க. இராசரத்தினம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்கப்பட உள்ளது. (க-152)

## நூலக வசதி

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு வேண்டிய நூலக வசதிகளும், நூல்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் ஆரம்ப நடவடிக்கைகளை தேசிய கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளதுடன் மூன்று கட்ட நூல்களையும் வழங்கியுள்ளது. (க-152)

## வேண்டுகோள்

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்கள் தமது பாவனைக்குத் தேவையான சைக்கிள்களை கொழும்பில் இருந்து சகாய விலையில் கப்பல் மூலம் தருவித்து வழங்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-152)

## அங்குரார்ப்பணம்

வடமராட்சியில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சமாசம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

இச்சமாசத்தில் 21 கிளைகள் அங்கம் வகிக்கின்றன. (த-173)

## புங்குடுதீவு மாணவன் சாதனை

லண்டன் மான்செஸ்ரர் பல்கலைக்கழகத்தில் மின் இலத்திரனியற் பொறியியலாளராகப் புங்குடுதீவு மாணவன் ஏ. எம். பிறேம் ஜெயந்த முதற் பிரிவிற் சித்தியடைந்துள்ளார். (க)

## புதிய குடிசைகள்

மானிப்பாயில் செயற்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ், இடம் பெயர்ந்த மக்களுக்குப் புதிதாக 180 குடிசைகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

இத்திட்டத்துக்கு அமைய முதற்கட்டமாக மானிப்பாயில் உள்ள செல்லமுத்து அகதிமுகாமில் தங்கியுள்ள மக்களுக்கு பல புதிய குடிசைகளை அமைக்கும் பணியை அது ஆரம்பித்து செயற்படுத்துகிறது. (க-152)

## பாராட்டு விழா

கைதடி. இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலய வருடாந்தமகோற்சவத்தின்போது தொடர் தெய்வீகப் பேருரைகள் நிகழ்த்திய மூத்த சமய விரிவுரையாளர், மெஞ்ஞான வாரிதி பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மாவுக்கு தீர்த்தத் திருநாளன்று பாராட்டு விழா நடத்தப்பெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடந்த இவ்விழாவில் பிரம்மஸ்ரீ ஈஸ்வரசர்மாவுக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கப்பட்டது. பலரும் வாழ்த்துரை வழங்கினர். (அ)

## வவுனியா விவசாய கல்லூரி அனுமதி

யாழ்ப்பாணம், செப். 9

வவுனியா விவசாயக் கல்லூரியில் இந்த ஆண்டிக் அனுமதி பெறுவதற்கான நேர்முக பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்தில் நடைபெறும்.

முன்னர் அறிவித்தபடி எழுத்துப் பரீட்சை நடத்தப்படமாட்டாது இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் அனைவரும் இந் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ-162)

# சிறுவர் மனநிலைக்கேற்ற இலக்கியம் படைக்கவேண்டும்

## கவிதை நூல் வெளியீட்டில் உரை

"சிறுவர் இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளிகள் சிறுவர் மனப்பாங்கைப் புரிந்துகொண்டு அவற்றை உருவாக்க வேண்டும்"

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற யாழ். இலக்கிய வட்ட வெளியீடான கவிஞர் ஐயாத்துரையின் "வளர் தெங்கு" சிறுவர் கவிதை நூல் அறிமுகவிழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. த. கலாமணி இவ்வாறு கூறினார்.

கடந்த வியாழக்கிழமை அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயத்தில் இவ் விழா நடைபெற்றது.

திரு. கலாமணி மேலும் பேசும் போது கூறியதாவது!

"சிறுவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய பொருள் அடக்கமும் பாடக் கூடிய சந்த அமைப்பும் கொண்டதாக இந் நூலில் உள்ள கவிதைகள் அமைந்திருக்கின்றன" என்றார்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையிடம் இருந்து முதல் பிரதியை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசாவும் சிறப்புப்பிரதியை நல்லூர் கொத்தணி அதிபர் திரு. மு. இராமலிங்கமும் பெற்றுக் கொண்டனர். அன்பர்கள், ஆதரவாளர்கள் கவிஞருக்கு மலர் மாலைகள் அணிவித்துக் கௌரவித்தனர்.

யாழ். பிரதேசச் செயலாளர் திரு க. குணராசா யாழ். இலக்கியவட்டச் செயலாளர் திரு. ஐயா சச்சிதானந்தம் உட்பட பலர் பேசினார்கள். (க-111)

# நம்பிக்கையை கட்டி எழுப்ப எவரும் இதயசுத்தியுடன் முன்வரவில்லை

## பிரிகேடியர் வீரசேகரா கூறுகிறார்

கொழும்பு, செப். 9

சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் நம்பிக்கையும், பரஸ்பர புரிந்துணர்வும் ஏற்படவேண்டும். இவர்களுக்கு இடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப எவருமே இதயசுத்தியுடன் முன்வந்ததாகத் தெரியவில்லை. அப்படியானவர்களை இதுவரை நான்காணவும் இல்லை, இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கூறினார்.

பல்லேகல புனர்வாழ்வு முகாமில் இருந்து அண்மையில் இளைஞர்கள் சிலர் விடுதலை செய்யப்பட்டபோது அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்களின் முன்னிலையில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

சிங்களவர்களும், தமிழர்களும் தங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளையில், இரு இனத்திற்கும் இடையில் நம்பிக்கை ஏற்பட்டு ஒற்றுமையாக வாழ வேண்டியது அவசியமாகும்.

தமிழர்களுக்குச் சிங்களவர்களும், சிங்களவர்களுக்கு தமிழர்களும் உறவினர்கள் உள்ளனர். ஒரு குடும்பத்தில் தாய் அல்லது தந்தை தமிழராகவோ சிங்களவராகவோ இருப்பதை நாம் காண்கிறோம்— என்றார். (ஒ-6)

## கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 9

பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1993, 1994 பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்தவர்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே யாழ் இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறவிருந்த இரண்டு பிரிவுகளும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன எனவும், இதில் விரிவுரையாற்றும் விரிவுரையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் இணைப்பாளர் திரு. வி. புலேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-162)

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 9

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் காலஞ்சென்ற எச். என். பெர்னாண்டோவின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று எதிர்வரும் [illegible] காலை 10 மணிக்கு [illegible] இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)


# தேவை

1. ஆங்கில நூல்களை தமிழ்மொழிக்கு மொழி பெயர்க்கக் கூடியவர்கள் தேவை.
2. தமிழ் சஞ்சிகை ஒன்றிற்கு செய்திகள் சேகரிப்பதற்கும், கட்டுரைகள் எழுதுவதற்கும் சிறந்த அனுபவம் வாய்ந்தவர்கள்.
3. தமிழில் தட்டெழுத்துச் செய்யக் கூடியவர்கள் (ஆண்கள்)
4. வாராந்தப் பத்திரிகை ஒன்றிற்கு ஆசிரியராகப் பணியாற்றக் கூடியவர்கள். (அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

10-09-1993இல் நேரில் சமுகம் தரவும்.

யாழ். வட்டச் செயலகம்,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா டீசல் இன்ஜினியேர்ஸ் அருகில்

(27226)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

G.C.E. O/L க. பொ. த. சாதாரணம் கடந்தகால பரீட்சை வினாக்களும் விடைகளும் 1980, 81, 82, 83, 84, 85, 86, 87, 88 (89 S P) 90 New 90 தொகுப்பு: இ. செல்வநாயகம். விற்பனையாகிறது! பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-6054)

### வீடு விற்பனைக்கு

8½ பரப்புடன் கூடிய இரட்டை வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 7 படுக்கை அறைகள், 3 கழிவறைகள், 3 சமையலறைகள், 3 குளியலறைகளும், விசாலமான பல்கணியையும் கொண்டது. தனியாகவோ இருவர் சேர்ந்தோ வாங்கலாம். அலுவலகங்கள், திணைக்களங்கள் நடத்தவும் ஏற்றது. அமைதியான சுற்றாடலில் உள்ளது. க. புவனம், 99, கெப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (6466)

### தேவை

நல்ல நிலையில் உள்ள வீட்டுப்பாவனைக்குரிய தையல் மெஷின் (Singer) தேவைப்படுகின்றது. தொடர்பு: S. S. தமிழராஜா, ''மருதமகால்'', இணுவில் வீதி, மானிப்பாய். (6468)

### தவறிவிட்டது

சிங்கராயர் லீனஸ் யோசப் (இல. 572993850 V) அருளானந்தம் ஜெயந்தி ஆகியோரின் அடையாள அட்டைகள் 6-9-93 அன்று புங்கன் குளம் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். J. அருளானந்தம், உயரப்புலம், ஆனைக்கோட்டை. (27216)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் மிகச் சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்! டில்கா வாச் அன்ட் றேடியோ சேர்விஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கல்பாரி அருகில்), கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (27281)

### துர்க்கா திருமண சேவை

ஆண், பெண் இருபாலாருக்குரிய சகல குறிப்புகளும் இருக்கின்றன. உடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை. வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (6643)

### சீயாக்காய்ப்பவுடர்

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் சித்த மருத்துவ முறைப்படி சீயாக்காய், பயறு, வெந்தயம் உட்பட பல மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. கண்குளிர்ச்சி, கூந்தல் வளர்ச்சி, சுகமான வாழ்வுக்கு ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்குங்கள். கிடைக்குமிடம்: விக்னேஸ்வரா களஞ்சியம், சன்னதி, சிவா வர்த்தக நிலையம், விநாயகர் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி ஆகிய இடங்களில். (சி 6059)

காவேரி சீயாக்காய்ப் பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் கூந்தல் வளர்ச்சி, கண் குளிர்மைக்கு மிகவும் சிறமானது. யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்: சிவசம்பு களஞ்சியம், மின்சார நிலைய வீதி. (27175)

### வர்த். நிதியும் அலகு - 2

வெளிவந்து விட்டது!!! இருப்பு, களஞ்சியம், தொடர்பாடல், போக்குவரத்து, வியாபார சேர்க்கை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய உயர்தர வகுப்பிற்குரிய பாடநூல் தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன், B. Com (Hons , M. B. A. யாழ். பல்கலைக்கழகம். (6464)

**பாரதி**
சித்தன்கேணி
**SPOKEN ENGLISH**
By
**Mr. BRITTO**
புதிய பிரிவு ஆரம்பம்:
**9 - 9 - 1993**
வியாழன் காலை 10-30
(சி-6063)

இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்
(S. L. A. S.)
க. பொ. த. (உ, த) வகுப்புக்குரியது.
ஆக்கியோன்:
**D. SAM**
புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
(27225)

**BECON**
STANLEY ROAD, JAFFNA.
விலங்கியல்
மீட்டல் வினா - விடை
வகுப்பு
பிரிவு: III
வியாழன் 3 - 6 p. m.
ஆசிரியர்:
திரு. கெங்காதரன்
ஆரம்பம்:
09 — 09 — 1993
வியாழன் 3 p. m
[சி/6043]

**கலை, வர்த்தக கல்லூரி**
C. C. A.
வெலிங்டன் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம்.
**A/L 94**
துரித மீட்டலும் வினா விடையும்
வர்த்தகம்:
திரு. இ. இரத்னம்
ஆரம்பம்:
11 — 09 — 1993
காலை 7-00 மணி
நேர அட்டவணை

| சனி | ஞாயிறு |
|---|---|
| 7 9 | 7 — 9 |

குறிப்பு:
I) பாடத்திட்டம் முடிக்கப்படும்.
II) வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் நடைபெறும்.
(சி-6047)

பிரேமதாச ஆரம்பித்த

## 15,000 கருத் திட்டங்களை அமுல் செய்ய முடியாத நிலை

கொழும்பு, செப். 9

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா ஆரம்பித்த 15 ஆயிரம் கருத்திட்டங்களை தொடர்ந்து அமுல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசச் செலவினத்தில் 10 சதவீதத்தை வெட்டும்படி ஜனாதிபதி விஜேதுங்க விடுத்துள்ள உத்தரவே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா ஆரம்பித்த 200 ஆடை உற்பத்தித் தொழிற்சாலைத் திட்டமும் கைவிடப்படும் நிலையை அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஆடைத் தொழிற்சாலைகளுக்கு ஆடை தயாரிப்பதற்குத் தேவையான துணிகளை வழங்க நிர்ணயிக்கப்பட்ட கோட்டாவை கடுமையாக அரசு குறைத்துள்ளதே இந்த நெருக்கடிக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளை நடத்தும் தொழில் அதிபர் ஒருவர், தாம் தமது ஆலைகளின் பத்தை மூடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதனால் 10 ஆயிரம் பேர் தொழில் இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-ஏ)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 04 — 1963



உதிர்வு: 10 — 09 — 1984


**சின்னத்தம்பி ஜெயந்திரன்**
(கைதடி மேற்கு)

அன்பு மகனே!
ஆண்டு ஒன்பது ஆயினும்
ஆறாத விழிகளாய்
தினமும் நினைத்து வாடுகிறோம்.
செல்வமே நீ சென்றதெங்கே?
ஆண்டவனை வேண்டுகிறோம்.


அம்மா, அக்கா,
தம்பிமார், தங்கை,
மாமன்மார், மாமிமார்,
அன்ரிமார், சித்தப்பாமார்.

சுந்தரோடை வீதி,
மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
(சி-6069)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தையா சண்முகநாதன்**
மண்ணில்: 15 — 04 — 1928
விண்ணில்: 27 — 07 — 1993



**பாலச்சந்திரன் அஜீத்**
மண்ணில்: 11 — 04 — 1986
விண்ணில்: 27 — 07 — 1993

27 - 07 - 1993 செவ்வாய்க்கிழமை எதிர்பாராமல் நடந்த விமானத் தாக்குதலின் போது அகால மரணமடைந்த கந்தையா சண்முகநாதன், பாலச்சந்திரன் அஜீத் ஆகிய இருவரதும் 45 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (09 - 09 - 1993) வியாழக்கிழமை நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


அஜீத்தின் பெற்றோர்.

ஞா. பா. வீதி,
கல்வியங்காடு.
(27219)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
20—01—1934

ஆண்டவன் அடியில்:
09—09—1989



**அமரர் சுந்தரம் கிருஷ்ணபிள்ளை**

(யாழ். வல்வெட்டித்துறை, வல்வெட்டியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி அக்கராயன் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட, அக்கராயன் குளம் — கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், விக்கின விநாயகர் ஆலய நிர்வாகசபைப் பொருளாளர், யூனியன் குளம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபைத் தலைவர், அரச கட்டட ஒப்பந்தகாரர்)

எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களினின்று என்றுமே அகலாது.

மனைவி: சிரங்கம்,
மகன்: தியாகராசா,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

இல: 10, நச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(27056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு நாடும் அமைதியை விரும்புகிறது யாராவது முயற்சி எடுக்க வேண்டும்

## தொண்டமான் கூறுகிறார்

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு சமீபத்தில் நாடு திரும்பிய அமைச்சர் தொண்டமான் "சண்டே ரைம்ஸ்", "சண்டே ஐலண்ட்" மற்றும் வீரகேசரி வார இதழ்களுக்குப் பேட்டி அளித்திருந்தார். "சண்டே ரைம்ஸ்" 'சண்டே ஐலண்ட்' வார இதழ்களில் வெளியான பேட்டிகளின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகி உள்ளது

அமைச்சர் தொண்டமான் 'சண்டே ஐலண்ட்' வார இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:

கேள்வி: ஐரோப்பிய பயணத்தின்போது தாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு அரசின் ஆதரவும் இருந்ததா?

தொண்டா: இல்லை எனது பேச்சுவார்த்தைக்கும் அரசுக்கும் தொடர்பு எதுவும் இல்லை. இப்பேச்சுவார்த்தை தற்செயலாக நடந்தது இங்கிலாந்தில் வாழும் தமிழர்களைச் சந்தித்தேன். மத்திய லண்டனில் நூறுபேரளவில் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பங்கு பற்றினேன். பின்னர் லெஸ்டர் நகரில் 50 பேர் கொண்ட குழு ஒன்றை சந்தித்தேன். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் சம்பந்தப்படுமாறு என்னை அவர்கள் கேட்டுக் கொண்டனர். இவ்விரு கூட்டங்களையும் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் இணைப்பாளர் என எனக்குத் தெரிவிக்கப்பட்ட ஒருவர் என்னைச் சந்தித்தார். அவரும் இப்பிரச்சினையில் சம்பந்தப்படுமாறு என்னை வலியுறுத்தினார். ஐரோப்பா முழுமைக்குமான விடுதலைப் புலிகள் இயக்க ஒருங்கிணைப்பாளர் லோறன்ஸ் திலகர் என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார். அதன் அடிப்படையிலேயே பாரிஸ் சந்திப்பு இடம்பெற்றது பாரிஸில் திரு திலகர் என்னை நான் தங்கியிருந்த ஹோட்டலில் வந்து சந்தித்தார்- சமஷ்டி அரசமைப்பிலான தீர்வு ஒன்றுக்குத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர்கள் கூறியுள்ளனர் என்று திரு. திலகர் எனக்கு தெரியப்படுத்தினார். இது விஷயத்தில் சம்பந்தப்பட்டு உதவுமாறு திரு திலகரும் என்னைக் கேட்டுக் கொண்டார்.

கடந்த தடவை பேச்சுவார்த்தை நடத்தும் யோசனை முன்வைக்கப்பட்ட போது நான் யாழ்ப்பாணம் செல்லாதது குறித்து தாங்கள் ஏமாற்றமடைந்ததாகவும் திலகர் கூறினார். தீர்வு ஒன்று குறித்து பேச்சு நடத்த யாழ் வருமாறு அவர்கள் அழைத்தனர்.

அரசாங்கத்துடன் இது விஷயத்தை பேசுவதாக நான் அவர்களுக்கு உறுதியளித்தேன். இது குறித்து நான் விரைவில் ஜனாதிபதி, பிரதமருடன் பேசவுள்ளேன் நான் யாழ்ப்பாணத்துக்கு செல்வது ஜனாதிபதி, பிரதமருடனான பேச்சுகளின் பெறுபேறுகளில் தான் தங்கியுள்ளது.

கேள்வி: இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க திட்டவட்டமான யோசனை ஏதும் தங்களிடம் உண்டா?

தொண்டா: அப்படி ஒன்றும் என்னிடம் இல்லை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஷ்டி அரசமைப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

கேள்வி: அப்படியானால் பேச்சுவார்த்தை சிவில்சேவை யோசனைகளின் அடிப்படையிலா?

தொண்டா: இந்த அடிப்படையில் இருக்கமுடியும். குறைந்த பட்சம் சமஷ்டி என்பது பொதுவான நிலையாக உள்ளது.

கேள்வி: ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிப்பீர்களா?

தொண்டா: ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் நடத்தும் பேச்சுக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்து தமிழர் குழுக்களுடன் மட்டும் அல்ல சிங்கள எதிர்க்குழுக்களுடனும் நான் பேசுவேன்.

கேள்வி: அதன் பின்னர் யாழ். செல்வீர்களா?

தொண்டா: பேச்சுக்களில் நான் காணும் முன்னேற்றத்தில்தான் அது தங்கியுள்ளது.

கேள்வி: ஏதாவது நடக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறீர்களா?

தொண்டா: முழு நாடுமே



அமைதியை விரும்புகின்றது. யாராவது முன் முயற்சி எடுக்கவேண்டும். இங்கு அப்படியான நிலை உருவாகி வருகிறது. சமாதானத்தை விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பைச் செய்யவேண்டும்.

கேள்வி; பேச்சுவார்த்தைக்காக பிரபாகரனை சந்திக்க நீங்கள் எண்ணியுள்ளீர்களா?

தொண்டா: ஆம் நாம் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அது பிரபாகரனுடன் தான் நடத்தப்படவேண்டும். பிரபாகரன்தான் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவர்.

கேள்வி: அரசு தரப்பில் யார் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்?

தொண்டா: ஜனாதிபதி, பிரதமர் இது திருப்திகரமானால், எதிர்க்கட்சிகளும் ஏனையவர்களும் சம்பந்தப்படலாம்.

கேள்வி: பேச்சுவார்த்தைக்கு கால அட்டவணை உண்டா? எவ்வளவு விரைவில் பேச்சு ஆரம்பமாகும்?

தொண்டா: விரைவில் ஜனாதிபதி, மற்றும் பிரதமரை நான் சந்திக்கவேண்டும். அதன் பின்னர்தான் நான் எடுக்கக்கூடிய மற்ற நடவடிக்கைகள் குறித்து அறியக்கூடியதாக இருக்கும்.

கேள்வி: இந்த ஆண்டு முடிவினுள் ஏதாவது இடம்பெறும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

தொண்டா: நாம் எல்லோரும் அப்படியே நம்புவோம்.

சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் தொண்டமான் சொன்னதாவது:

கேள்வி: ஈழம் தந்தால் அதற்கு பதிலாக அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழர் வாக்குகளை உங்களுக்குத் தருவதாக விடுதலைப் புலிகள் உறுதி மொழி வழங்கியிருக்கலாம் என்று அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளதே.

தொண்டா: இவை எல்லாம் முட்டாள் தனமான ஊகங்களாகும். சமஷ்டித் தீர்வையே விடுதலைப் புலிகள் கோருவதாக திலகர் கூறியிருக்கிறார். ஈழம் என்ற கேள்வியே இல்லை தவறான ஊகங்களை வெளியிடுவதை மக்கள் நிறுத்த வேண்டும். வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது எமது கவலையாக உள்ளது புதிய யோசனைகள் எவற்றையும் திலகர் என்னிடம் தரவில்லை. ஆனால் தமிழர் என்ற முறையிலும் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் அக்கறை கொண்டவர் என்ற முறையிலும் என்னிடம் அவர் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

சமஷ்டி என்ற அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும்படி அரசாங்கத்தைக் கேட்கும்படி திலகர் என்னைக் கேட்டுக் கொண்டார். தற்போதைய அரசமைப்பு ஊடாக சமஷ்டியை கொண்டு வரக் கூடாது என்றும் புதிய சமஷ்டி அரசமைப்பு ஒன்று கொண்டுவரப்படவேண்டும் என்றும் திலகர் வற்புறுத்தினார்.

—இப்படி தொண்டமான் கூறினார். (இ-எ)

# உதயன்

## இறுதிவெற்றிக்கு வழி அதுவே

தமிழர்களின் பிரச்சினை தீர்வதற்கான யோசனை ஒன்றை அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார். பிரச்சினை தீரக்கூடிய சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கலாம் என்ற வழிமுறையே அவரது யோசனை.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்கள். விடுதலைக்காகப் போராடுபவர்களான விடுதலைப் புலிகள் போராளிகளும் தியாக உணர்வுடன் உறுதியாக இருக்கிறார்கள்

இந்த உறுதிப்பாட்டைக் குலைக்க முடியாது என்ற நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட வேண்டும் —

எனவே போராட்டத்தில் தமிழர்களின் உறுதியான நிலைப்பாடு நீடித்தால் அவர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு வழி பிறக்கும்— என்பது அமைச்சரின் நிலைப்பாடு.

அமைச்சர் தொண்டமான் ஒரு தமிழன் என்ற வகையில் தமிழர்களின் நிலையை நன்றாக உணர்ந்திருக்கிறார் என்பதனை அவரது யோசனை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அவர் கூறும் வழிமுறை அர்த்தம் உள்ளது. வடக்கின் மீது ஒரு பெரும் தாக்குதலை அரசாங்கப் படைகள் நடத்தக்கூடும் என்ற இன்றைய சூழ்நிலையில் அமைச்சர் தொண்டமானின் யோசனை வேளைக்குகந்த நல்ல அறிவுரையுமாகும்.

கடந்த மூன்றே கால் வருடமாக "ஈழப்போர் இரண்டு" தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. அரசாங்கப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு உண்டாகும் உயிரழிவுகள், உடைமைச் சேதங்கள், வாழ்க்கைக் கஷ்டங்கள் அனந்தம். பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பவற்றால் அரசு அவர்களை முற்றுகை இட்டுள்ளது. நாளாந்த வாழ்க்கை நரகலோக வாழ்வைவிட மோசமாகி விட்டது. என்னென்ன வழிகளால் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து அவர்களை முடக்கி மனப் பலவீனம் அடையச் செய்ய முடியுமோ அத்தனை வழிமுறைகளையும் ஸ்ரீலங்கா அரசு கையாண்டு வருகிறது.

ஆனால் தமிழர்களோ, எவ்வித கஷ்டங்களின் மத்தியிலும், அழிவுகளை சந்திப்பினும் தமது விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்வதில் உறுதியாக உள்ளார்கள். கடந்த முப்பத்தொன்பது மாதங்களும் அதற்குச் சான்று.

இனிமேலும் அந்த மன உறுதி அவசியம். அப்போதுதான் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும், குறிப்பாக கடந்த மூன்றே கால் வருட வாழ்க்கையின் அவலத்துக்கும் பயன் கிடைக்கும். போராட்டத்தின் மூலம் கிடைக்கும் விடுதலை இந்தச் சந்ததிக்கு மட்டும் உரியதாகாது. அடுத்து வரும் தமிழர் சந்ததிகள் அனைத்துக்கும் சொந்தமாகப் போவது. ஆகையால் அற்ப சலுகைகளைக் கண்டு தமிழன் இனிமேல் அலமந்து விடமாட்டான் என்பது அரசுக்கும் உலகத்துக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

தோல்விகளின் மத்தியிலும் இராணுவத் தீர்வை இறுகப் பிடித்திருக்கும் அரசை பூரணமாக வெல்வதற்குத் தமிழர்களுக்கு துணைசெய்யக் கூடியவை மன உறுதியும் தியாக உணர்வுமேயாகும். அவை இரண்டுமே தமிழர் போராட்டத்தை உலக அரங்குக்கு எடுத்துச் சென்றுள்ளன இனியும் அவை நீடிக்க வேண்டும். எந்த இடர் வரினும் அவற்றில் தளர்வு, தொய்வு உண்டாக அனுமதிக்கக்கூடாது. அதுவே இறுதி வெற்றிக்கு வழிசெய்யும்.

# தொண்டமான் முயற்சி பயன் தரமாட்டாதாம்

## ஈ. பி. ஆர். எல். எவ். கூறுகின்றது

அமைச்சர் தொண்டமான் தனிப்பட்ட ரீதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்த எடுக்கும் முயற்சி தற்போதைய வடக்கு-கிழக்கு நிலைவரத்தை சீர்திருத்தாது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். பொதுச் செயலாளரும் எம்பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சண்டே ஐலண்டுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

அரசின் ஆதரவின்றி அமைச்சர் தொண்டமானோ அல்லது சபாநாயகர் முஹம்மதுவோ தீர்வு ஒன்றைக் கொண்டுவர முடியுமா என்பது குறித்து தமது கட்சி ஐயம் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தனிப்பட்ட நபர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண நினைக்க முடியாது. அரசினால் தான் தீர்வைக் காண முடியும் என்று நம்புகின்றோம். அமைதியைக் கொண்டு வருவதற்கு தீர்க்கமான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் தவறுமானால், இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டே போகும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

# ஈ.பீ.டி.பீ.—அரச உறவு "மச்சான்" நிலையில்

கொழும்பு, செப் 9

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஈ. பி. டி. பி. க்கும் இடையேயான உறவு "சகோதரன்" என்ற நிலையில் இருந்து "மச்சான்" நிலைக்கு மாறியிருக்கிறது.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா முன்கண்டவாறு கூறினார்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது எம்மை "சகோதரர்கள்" என்றழைத்தார்கள். விஜேதுங்காவின் நிர்வாகத்தின் கீழ் "மச்சான்" என்று எம்மை அழைக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். (இ-எ)

# கெற்பலி மக்கள் இரவில் வேறு இடத்தில் தஞ்சம்

யாழ்ப்பாணம், செப். 9

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு முகாமில் உள்ள மக்கள் இரவில் இடம் பெயர்ந்து திவிடத்தில் பனை தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்குகின்றனர்.

ஸ்ரீலங்காப் படையினர் திடீரென்று வந்து தாக்குதல் நடத்தலாம் என அஞ்சியே அவர்கள் இரவு நேரங்களில் பாதுகாப்பான இடத்தை நாடிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 12ஆம் திகதி பூநகரியில் நிலைகொண்டுள்ள படையினர் கெற்பலி குடியிருப்புப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர் என்பதும்—

இந்தச் சம்பவத்தின்போது இரு பெண்களும், ஒரு குழந்தையும் அந்த இடத்திலேயே துடி துடித்து பலியானார்கள் என்பதும் தெரிந்தவையே. (ஓ·17)

# கொழும்புத் துறைமுகப் பகுதியில் புலிகளின் தாக்குதல் பிரிவு உறுப்பினர் பிடிபட்டனராம்

கொழும்புத் துறை முகத்துக்கு வெளியே கடற்படையினர் நடத்திய சோதனையின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தாக்குதல் பிரிவின் இரு உறுப்பினர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர் என்று இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இந்த இருவரும் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய போது கடற்படை காவல் படையினர் இவர்களைக் கண்டு பிடித்தனர் என்றும்—

இவர்களைச் சோதனையிட்ட போது இவர்களில் ஒருவர் தனது கைத் துப்பாக்கியை எடுத்து படையினர் மீது சுட்டார் என்றும்—

எனினும் அவர்கள் இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பதினாறு சுற்று ரவைகளும் அப்போது கைப்பற்றப்பட்டனவாம். (இ-எ)

**போரினில் வெற்றி கொள்வோம் பொருளாதாரத்தில் தன்னிறைவடைவோம்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகத்தின்
ஆதரவில்

# மாபெரும் கலைநிகழ்ச்சி

இடம் : மானிப்பாய் மாவீரர் கலையரங்கு
காலம் : 12 : 09 : 93 ஞாயிற்றுக்கிழமை

தமிழீழத்தின்
தலை சிறந்த இசைக்குழுக்களான
"ராஜன்ஸ்" "சாந்தன்"
இணைந்து வழங்கும்

## காற்றினிலே வரும் கீதம்
(இசை நிகழ்ச்சி)

அன்பளிப்புச் சீட்டுக்கள் பெறும் இடம்

1) குலம் கிறீம் ஹவுஸ்
மானிப்பாய் வீதி
2) சன் றைக் கோடிங் சென்ரர்
(நியூ மார்க்கற்)

சுன்னாகம் வர்த்தகர் சங்கம்

(சி-2029)

---

எஸ்.எம். பெர்னாண்டோ
நிறுவனத்தின் ஆதரவில்
யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம்
நடத்தும்
"மிட்ரவுண்" கிண்ணத்திற்கான
ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில்
ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்
தோற் மந்து

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

காலம்: 02, 03-10-1993

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் பெறும் இடமும்,
அனுப்பும் இடமும்:
எஸ். எம். பெர்னாண்டோ,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பக் கட்டணம் ரூபா 100/-

செயற்திட்ட இயக்குநர்,
யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம்,

(சி-5900)

---

# மரண அறிவித்தல்

திருமதி
## லோகேஸ்வரன் ஜெயக்குமாரி

காரைநகர் களபூமியைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்திய அதிகாரி ஆறுமுகம் சோமசுந்தரம் (கனடா) — செல்லம்மா (கனடா) தம்பதிகளின் புதல்வி திருமதி லோகேஸ்வரன் ஜெயக்குமாரி கடந்த 4 ஆம் திகதி கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் தம்பையா லோகேஸ்வரன் வசந்தன் (கனடா), அவர்களின் அன்பு மனைவியும், தினேஷ்குமார் (கனடா) அபிதிகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. திருமதி தம்பையா தம்பதிகளின் அன்பு மருமகளும், சந்திரகுமாரி, பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன், ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், சு.இரத்தினராஜா (கோபால்), திருமதி பா, சந்திரகுமாரி, திருமதி சு, சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும், சாந்தி, சர்மிளா ஆகியோரின் சித்தியும், ஜனனி, தர்ஷிகா, மயூரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோமசுந்தரம் சுரேந்திரன்
(அண்ணன்)
இரத்தினராசா சந்திரகுமாரி
(அக்கா)

2, சோமசுந்தரம் ஒழுங்கை,
சண்டுக்குளி.

(27228)

---

# இன்று

திசை இடம்பெயர்ந்த மக்களின் நலன் காக்கும் கழகம் மகளிர் அமைப்பு ஒன்றை இன்று வியாழன் மாலை 6-30 மணிக்கு யாழ். விரேசன் அகதி முகாமில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளது.

# யாழ். லயன்ஸ் இலவச மருத்துவ பரிசோதனை

வேலணையிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ்ப்பாணம் அரசடியில் இயங்கும் சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தின் 350 மாணவர்களுக்கான இலவச வைத்திய பரிசோதனையையும் ஆலோசனையையும் யாழ்.லயன்ஸ் கழகம் இன்று வழங்குகிறது.

# தென்னிலங்கை நடிகர் கைது

தென்னிலங்கையின் பிரபல சினிமா, தொலைக் காட்சி நடிகரான கமல் அத்தனாராச்சி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

17 வயது பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் வன் முறைக்கு உட்படுத்தியதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மாணவி தமக்கு வேலை ஒன்று பெற்றுத் தருமாறு கேட்பதற்காக சம்பவ தினம் நடிகரின் வீட்டுக்குச் சென்றார் என்றும்—

அந்த நடிகர் நுகேகொடையில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சிறுமியை அழைத்துச் சென்று குற்றமிழைத்ததாகவும் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ 6)

## சோள விதை விநியோகம்

யாழ். மாவட்டத்திலே 1993/94 காலபோகத்தில் சோளப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் உயர் விளைவினைத் தரக்கூடிய சோளம் விதைகளை ஒரு கிலோ 28 ரூபா வீதம் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வீட்டுத் தோட்டத்திலே சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஊக்குவிப்பு முயற்சியாக ½ கிலோ சோளம் விதை இலவசமாக வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஈ)

---

## புலிகளின்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர்.

இதற்கிடையில்—

வட பகுதிக் கரையோரப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கான விநியோகங்களைத் துண்டிக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை பாதுகாப்பு அதிகாரிகள் ஏற்றுக் கொண்டிருப்பதாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஆ-உ-எ)

---

## தவறிழைத்த...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த கிலரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவ காலத்தில் அப்பகுதி இராணுவ முகாமுக்கு பொறுப்பாகவிருந்தவர் — அப்போது கேணல் தரத்தில் இருந்த — ஹரி வியனகேயே என "ராவய" தெரிவித்துள்ளது. (உ-6)

---

## பொதுக்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் வர்த்தகமும் கணக்கியலும் பாடத்துடன் பரீட்சை நிறைவுறும்.

தேர்வுக்குரிய நேர அட்டவணைப்படி 5 ஆம் திகதி நடைபெற இருந்த பாடங்கள் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ)

---

'கை' சின்னம் விவகாரம்

# அனுராவின் நிலை சரி என்கிறார் சிறிமாவோ

கொழும்பு, செப். 9

கடந்த மாகாண சபைத் தேர்தலில் 'கை' சின்னத்தைத் தியாகம் செய்து சுதந்திரக் கட்சி போட்டியிட்டதை அனுரா எதிர்த்தது தசரியான செயல்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சண்டே ஐலண்ட் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

'கை' சின்னத்தை கைவிட்டது பிழையான செயல் என்று திருமதி பண்டாரநாயக்கா தம்மைச் சந்தித்த மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவிடம் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி 'கை' சின்னத்திலேயே போட்டியிடும் என்று திருமதி பண்டாரநாயக்கா கூறியதை திரு. குணவர்த்தனா ஏற்றுக்கொண்டார் என்றும் சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது.

---

# மரண அறிவித்தல்கள்

செல்வன்
## சபாரத்தினம் திருவரங்கன்

சபாரத்தினம் திருவரங்கன் 25-8-93 இல் நயினாதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற சபாரத்தினம், மங்கையர்க்கரசியின் அன்பு மகனும், திருமதி பூரணத்தின் பேரனும், மகாலட்சுமி, ஜெயரத்தினம் (ஆசிரியர், நுவரெலியா), குகனேசன் (பிரான்ஸ்), மனோகரன், ஆனந்தராசா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசநாயகத்தின் (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) மைத்துனரும், சிவசோதி, கேசவநாதன் ஆகியோரின் மருமகனும், சாம்பவி, ஜனகன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நயினாதீவில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவசோதி
(மாமன்)

74/1, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[27230]

---

## நாகநாதபிள்ளை கந்தஞானி மாஸ்டர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர், பாற்சபை மேற்பார்வையாளர்)

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த நாகநாதபிள்ளை கந்தஞானி மாஸ்டர் 06 - 09 - 1993 இல் ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகநாதபிள்ளையின் சிரேஷ்ட மகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், சிவகுமாரியின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சபாநாயகமின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி இராசம்மா, திருமதி தங்கம்மா, திருமதி சிதேவிப்பிள்ளை, திருமதி நல்லம்மா மற்றும் சிவஞானம் (கனடா), திருமதி ஞானசவுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமானவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

தகவல்:
வி. க. காராளசிங்கம்
(மைத்துனர்)

21/02, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்.

(27232)

---

## திருமதி ஆறுமுகம் சாரதாம்பாள்
(வேலணை மேற்கு)

காரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி ஆறுமுகம் சாரதாம்பாள் 07 - 09 - 93 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் காரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் — இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மாவதி, பாலேந்திரன் (ஓய்வு பெற்ற கட்டடத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் — கனடா), ரவீந்திரன் (Director Samudra Aguarist Fish Gate Pvt Ltd Colombo), ராதாம்பாள் (யாழ்ப்பாணம்), கஜேந்திரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), சசீந்திரன் (பொறியியலாளர் (கனடா), நரேந்திரன் (பொறியியலாளர் கனடா), ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவரஞ்ஜினி (முன்னைநாள் தே. சே. வங்கி; யாழ்ப்பாணம்), யோகராணி (கொழும்பு), பாலச்சந்திரன் இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை), கனடாவில் வசிப்பவர்களான நிர்மலா, கனகேஸ்வரி, வாசுகி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி நடராசா இலட்சுமிப்பிள்ளை, திருமதி இராசையா மகேஸ்வரி (கனடா), திருமதி நடராசா பவானி, திருமதி மனோன்மணி தியாகராசா (மலேசியா), திருமதி புனிதவதி பரமலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்மா, நடராசா (ஆசிரியர்), திருமதி சௌந்தரநாயகி வேந்தனார், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோகுலன், நிதர்ஷினி, மதுவந்தி, அபிரா, ஜீவித்தா, விராஜ், வருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பாலச்சந்திரன்
(மருகர்)

160, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[27254]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361 இலுள்ள அச்சகத்தில் 09-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org